பதிவு எண் : ம. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை : 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 10உ (26—9—67) செவ்வாய் ★ வெளியூர் : புரட்டாசி 11உ (27—9—67) புதன் [இதழ் : 87

அண்ணாவின் மொழிக் கொள்கை

கத்தோலிக்கர் சங்க ஆதரவு

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் மொழிக் கொள்கையை, சென்னை கத்தோலிக்கர் சங்கம் வரவேற்றுள்ளதுடன், ஆங்கிலமே இந்தியாவின் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து நீடிப்பதற்கும், அதற்குரிய திருத்தத்தை அரசியல் சட்டத்தில் செய்வதற்கும் தனது ஆதரவையும் தெரிவித்துள்ளது.

தமிழக அரசின் மகத்தான சாதனை!

இவ்வாண்டு 5-இலட்சம் டன் அரிசி கூடுதலாகக் கிடைக்கும்

வேளாண் துறையில் புரட்சிகர முன்னேற்றம்

சென்னை, செப். 26—

"நடப்பு வேளாண்மைப் பருவத்தில் ஐந்து இலட்சம் டன் அரிசி கூடுதலாகக் கிடைக்கும்" என்று அதிகார வட்டாரத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் மொத்தம் 39 இலட்சம் டன் அரிசி கூடுதலாகக் கிடைத்தது, இவ்வாண்டு 44 இலட்சம் டன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அரசு மேற்கொண்டு இருபெரும் நடவடிக்கைகளின் பயனாகவே இந்தக் கூடுதல் அரிசி கிடைக்கிறது; அதாவது, 'ஏ. டி. டி. 27' என்னும் மிகுபயன் தரும் நெல் வகையைப் பெருமளவு சாகுபடி செய்ய ஏற்பாடு செய்தது; தஞ்சை மாவட்டத்தில் உழவு முறையில் பழைய முறைகளை மாற்றிப் புதிய முறைகளை ஏற்படுத்தியது.

மேலும் இவ்வாண்டு, விவசாயிகளுக்கு நீண்டகால--குறுகியகாலக் கடன்களாக வேளாண்மைப் பணிகளுக்கு உதவும்பொருட்டு ரூ. 8 கோடிவரை அளித்துதவும் திட்டத்துக்கு முதலிடம் தரப்பட்டது.

தர்மபுரி மாவட்டம் தவிர்த்து மற்ற எல்லா மாவட்டங்களிலும் பொதுவாக விளைச்சல் மனநிறைவூட்டும் வகையிலேயே இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

குறுவை அறுவடை இப்போதுதான் துவங்கியுள்ளது. அக்டோபரில் முழு அளவு நடைபெறும்.

சீன--மலாய் மொழிகளில் திருக்குறள்!

தனிநாயகம் அடிகளார் தகவல்

சென்னை, செப். 25—

"சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள், சனவரியில் சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது"

என்று, மலாயாப் பல்கலைக் கழக இந்திய மொழிப் பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் இங்கு தெரிவித்தார்.

"மலாயாப் பல்கலைக் கழகத்தின் இந்திய மொழி கல்வித் துறையால்; காப்டுக்கோட்டை செட்டியார் நிதியின் பண உதவியைக் கொண்டு இந்நூல் வெளியிடப்படுகிறது" என்றார் அவர்.

"திருக்குறள் மலாய் மொழிப் பதிப்பும் விரைவில் வெளியிடப்படும்" என்றார் அவர்.

"சீன மொழித் திருக்குறள், சீனாவிலும், தைவானிலும் நல்ல வரவேற்பைப் பெறும்" என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சர் கருணாநிதி உடல் நிலை :

மருத்துவர்கள் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வருகின்றனர்

சென்னை, செப். 26—

நேற்று இரவு அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சிறிது நிம்மதியாகத் தூங்கத் தொடங்கினார்.

அவருக்கு இரத்த நாளம் மூலமாக 'சிலைன்' செலுத்தப்பட்டிருக்கிறது.

தூங்கும்போது, நேற்றிரவு பட்ட சிரமம் இன்று இல்லை; முகம், நேற்றைவிட இன்று தெளிவாக இருக்கிறது; எனினும், சோர்வு தென்பட்டது.

மெல்லிய குரலில்......!

அமைச்சருக்குத் தலையில் அடிபட்டிருப்பதால், சென்னை பெரிய மருத்துவமனை டாக்டர்கள் அரைமணி நேரத்திற்கொரு சோதனை செய்கிறார்கள்.

அமைச்சரால் பேசமுடியும் என்றாலும், அவர் அதிகமாகப் பேசக்கூடாது என்று டாக்டர்கள் தடை விதித்துள்ளனர்.

நேற்று அமைச்சருக்கு இலேசாகக் காய்ச்சல் அடித்தது; எனினும் விரைவில் அது குணமாகி விட்டது.

மெல்லிய குரலில் நேற்று அவர் பேசினார்; டாக்டர்கள் அவரை விசாரித்தபோது, 'உடலில் ஒரு பக்கம் வலியிருக்கிறது' என்று கூறினார்.

ஓய்வு மிக அவசியம்!

சிகிச்சை பெற்றுவரும் அமைச்சரின் உடலில் மருத்துவ நிபுணர்கள் தொடர்ந்து சோதனைகளைச் செய்து பார்த்தனர்; இரத்த ஓட்டம்—இருதய இயக்கம்—மூளையின் நிலைமை ஆகியவை பற்றிச் சோதனைகளைச் செய்தனர்.

அவரது கழுத்தில் காயமேற்பட்டு இரத்தம் கட்டியுள்ளதை டாக்டர்கள் கண்டனர்.

நேற்று காலையில் அமைச்சருக்கு தூக்க மருந்து ஊசி மூலம் செலுத்தப்பட்டது.

"நான்கு நாட்களுக்கு அவர் முழு ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும்; அசையவே கூடாது; சிகிச்சை ஒழுங்காக நடக்கவும், அவர் விரைந்து குணமடையவும் இது மிகவும் அவசியம்" என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

அறிஞர் அண்ணா வேண்டுகோள்

"முழு ஓய்வு நல்குவதே கருணாநிதிக்குக்கிடைக்கச் செய்யும் சிகிச்சையாகும். டாக்டர்களும் இதையே தெரிவித்துள்ளனர்.

"நல்ல ஓய்வில் தங்கள் கண்காணிப்பில் வைத்திருக்கவே கருணாநிதியை மருத்துவமனையில் அனுமதித்திருக்கிறார்கள்.

"எனவே, கழகத் தோழர்களும், மற்ற நண்பர்களும் இதை உணர்ந்து, கருணாநிதியைக் காண மருத்துவமனை செல்லாதிருக்கும்படி வேண்டுகிறேன்"

என்று அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

கவர்னர் தந்தி

தற்போது உதகையில் முகாமிட்டுள்ள தமிழகக் கவர்னர் உஜ்ஜல் சிங் அவர்கள், அமைச்சர் கார் விபத்தில் சிக்கிய செய்தி கேட்டு வருந்துவதாகவும், அவர் விரைவில் குணமடைய வேண்டுவதாகவும் குறிப்பிட்டுத் தந்தி அனுப்பியுள்ளார்.

முத்துவின் உடல்நிலை

மதுரை எஸ். முத்து அவர்களுக்கு முழங்காலில் வீக்கம் தெரிய ஆரம்பித்தது.

டாக்டர்கள் பரிசோதித்துப் புதிய கட்டுப் போட்டனர்.

காலையும் மாலையும் அண்ணா வருகை

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நேற்று காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும்—ஆக இரு முறை மருத்துவமனைக்கு வந்திருந்து அமைச்சரைப் பார்த்துச் சென்றார்கள்.

எம்.ஜி.ஆர். அக்கறை

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள், படப்பிடிப்பை ரத்து செய்துவிட்டு, அமைச்சருடனேயே இருந்தார்; மருத்துவமனைக்கு வரும் தோழர்களையும், நண்பர்களையும் கட்டுப்படுத்தி அனுப்புவதில் அவர், பெரிதும் அக்கறை காட்டினார்.

ஏராளமான கழகத் தோழர்கள் அமைச்சரைக் காண வந்தனர்; ஆனால் டாக்டர்கள் விதித்துள்ள கட்டுப்பாடு காரணமாக யாரும் அனுமதிக்கப்படாததால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்ப நேரிட்டது.

எனினும், அமைச்சரின் உடல்நிலைபற்றி மிகுந்த கவலையுடன் விசாரித்துத் தெரிந்துகொண்ட பின்னரே, தோழர்கள் அங்கிருந்து சென்றனர்.

கம்யூனிஸ்டுத் தலைவர்கள் கே.டி.கே. தங்கமணி, ஏ.எஸ்.கே. அய்யங்கார், எம். ஆர். வெங்கட்ராமன், கே. ரமணி ஆகியோரும், சுதந்தராக் கட்சித் தலைவர் சா. கணேசன், ஹண்டே, மாரிசாமி ஆகியோரும், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், மனோரமா, மற்றும் கலைத்துறைப் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

முன்னாள் காங்கிரஸ் முதல்வரின் மோசடி

நீதிமன்றத்தில் வழக்கு

புதுடில்லி, செப். 25—

உருக்கு, வெல்லம் ஆகியவற்றில் மோசடி செய்தது சம்பந்தமாக டில்லி மாநில முன்னாள் முதலமைச்சர் பிரம்மபிரகாஷ், முன்னாள் காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசரண் குப்தா, மற்றும் சிலர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

இவர்கள் மீதான வழக்கு, டில்லி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

டில்லி மாநகராட்சி மன்றம் காங்கிரசு வசமிருந்தபோது, இந்த மோசடியிலிருந்து இவ்விருவரும் தப்பித்துக்கொள்ள முயன்றனர்.

'ஜெனீவா' பற்றி இரா. செழியன்

மேலை நாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள 'நம் நாடு' ஆசிரியர் இரா. செழியன் எம்.ஏ, எம்.பி. அவர்கள் 'ஜெனீவா' பற்றி எழுதும் கட்டுரை (சென்னை 28—9—67) 'நம் நாடு' இதழில் இடம் பெறும்.

மத்திய அரசு அதிகாரிகளின்

பொறுப்பற்ற செயல்!

தொலைபேசி வசதியைச் சொந்த வேலைக்குப் பயன்படுத்துகின்றனர்

இளம் அதிகாரிகளுக்கு இனி தொலைபேசி வசதி கிடையாது

புதுடில்லி, செப். 25—

மத்திய அரசு அதிகாரிகள், தொலைபேசி வசதியைப் பெருமளவில் தவறாகப் பயன்படுத்தியிருப்பது தெரியவந்துள்ளது.

அதிகாரிகள் பலர், தங்கள் வீடுகளில் உள்ள தொலைபேசியை, அளவுகடந்து தவறுதலாகப் பயன்படுத்துவது அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாம்.

வெளியூர்களுடன் நேரடியாக 'டயல்' செய்து தொடர்பு கொள்ளும் வசதி அவர்களின் தொலைபேசியில் செய்யப்பட்டுள்ளது. இந்த வசதியை அவர்கள், தங்கள் அதிகாரத் தொடர்பில்லாத சொந்த வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்!

எனவே, அதிகாரிகள் தங்கள் வீட்டில் உள்ள தொலைபேசிகளில் இத்தனை முறைதான் பேசலாம் என்று கட்டுப்பாடு விதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

அஞ்சல் துறை இலவசமாக அனுமதிக்கும் எண்ணிக்கையல்லாமல், ஒரு காலாண்டுக்கு 1,500 முறைமட்டுமே பேசலாம் என்பது அரசு விதித்துள்ள கட்டுப்பாடு. இந்த எண்ணிக்கைக்கு மேல் பேசினால், அதற்கான அதிகப்படியான கட்டணத்தை அந்தந்த அதிகாரிகளே செலுத்தியாக வேண்டும்.

பொருளாதாரச் சிக்கனத்தை முன்னிட்டு, இனி, துணைச் செயலாளர் பதவிக்குக் குறைந்த பதவி வகிக்கும் இளம் அதிகாரிகளுக்கு—அவர்கள் வீடுகளில் தொலைபேசி வசதியளிப்பதும் நிறுத்தப்படும்.

அதிகாரபூர்வமாகத் தொலைபேசி தேவை எனக் கருதப்படும், தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளின் இல்லங்களுக்கு மட்டுமே தொலைபேசி வசதி யளிக்கப்படும்.

'இந்த ஏற்பாடு கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்' என அறிவிக்கப்பட்டுள்ளது.

'இந்தித் திணிப்பால் நாடு பிளவுபடும்'

'ஆங்கிலமே இணைப்பு மொழியாக நீடிக்கவேண்டும்'—

வங்க மொழிப் பேராசிரியர்கள் அறிக்கை

"இந்தியா முழுவதிலும் உள்ள உயர்நீதிமன்றங்களிலும் மாநிலங்களின் தொடர்பு மொழியாகவும் ஆங்கிலமே நீடிக்க வேண்டும்"

என்று பேராசிரியர் டாக்டர் சுனில் குமார் சாட்டர்ஜி உள்ளிட்ட பல கல்வி நிபுணர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

"இந்தி இணைப்பு மொழியாக இருப்பதற்குத் தகுதியற்றது; இந்தி மொழியை விரும்பாத மாநிலங்களின்மீது கட்டாயமாகத் திணிப்பது நாட்டில் பிளவை உண்டாக்கும்"

என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மொழிப் பற்றி அண்மையில் தோன்றியுள்ள பிணக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்றும், அவசரமாக செய்யப்பட்ட முடிவுகளை மக்கள் மீது திணித்தால் நாடு பல துண்டுகளாகப் பிரிந்துவிடக் கூடும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

"வழக்கறிஞர்கள் — வரலாற்றாசிரியர்கள்—மருத்துவர்கள்—மொழி வல்லுநர்கள்—இலக்கியத் துறையில் உள்ளவர்கள்—பொருளாதார நிபுணர்கள்—கல்வி நிபுணர்கள் ஆகியோர் இப்பிரச்சினை குறித்து ஏற்கனவே கவலை தெரிவித்துள்ளனர்; இந்திய ஒற்றுமைக்கு ஊறு நேராவண்ணம் இப்பிரச்சினைக்கு ஒரு முடிவு காண நாட்டில் பல்வேறு துறைகளில் உள்ள அறிஞர்களைக் கூட்ட வேண்டும்'' என்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

'இந்தித் திணிப்பு முயற்சியைக்கைவிடுக'

'ஆங்கிலம் நீடிக்க அரசியல் சட்டத்தைத் திருத்துக'

விசாகப்பட்டினம் வழக்கறிஞர்கள் வற்புறுத்தல்

ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியைத் திணிக்க முயலும் இந்திய அரசின் போக்கைக் கண்டித்து விசாகப்பட்டினம் வழக்கறிஞர்கள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

"இந்தித் திணிப்பால் நாட்டின் ஒற்றுமைக்கே தீங்கு நேரிடும்" என்று அது எச்சரித்துள்ளது.

அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தியேனும், ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்க ஆவன செய்யவேண்டும் என்றும், இந்தியைத் திணிக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்றும், மாநில—மத்திய அரசுகளை இச்சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேபோல் மற்ற ஊர்களில் உள்ள வழக்கறிஞர் சங்கங்களையும் தீர்மானம் நிறைவேற்றியனுப்புமாறு அது கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி

திருவனந்தபுரம் வழக்கறிஞர்கள் உயர்த்தும் போர்க்கொடி

இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் திருவனந்தபுரம் வழக்கறிஞர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது.

கிளர்ச்சிக்கான நடவடிக்கைக் குழு ஒன்றையும் இந்தச் சங்கம் அமைத்துள்ளது.

திரு. வி. பி. பிள்ளை குழுவின் தலைவராகவும், திரு. கே. சி. மாத்யூ செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கி விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும் குழுத் தலைவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

மொழித்திணிப்பின் ஆபத்து

தலைமை நீதிமன்ற வழக்கறிஞர் குரல் கொடுக்கின்றனர்

"'மொழிப் பிரச்சினையும் இந்தியாவின் ஐக்கியமும்' என்பது பற்றி விரைவில் அகில இந்திய விவாத அரங்கு நடத்தவேண்டும்" என்று எல்லா மாநிலங்களையும் சேர்ந்த தலைமை நீதிமன்ற வழக்கறிஞர்கள் 76 பேர், இந்திய வழக்கறிஞர்கள் சங்கத் தலைவருக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இந்தியை அனுமதியோம்!

அனுமந்தையா கூறுகிறார்

"நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் ஆங்கிலம் அகற்றப்படுவதை அனுமதிக்கமாட்டார்கள்.

"சில அரசியல்வாதிகள் ஆங்கிலத்திடம் காட்டும் வெறுப்பை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை!

"இந்தியை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்ய வேண்டுமானால் அதற்காகப் பல நூற்றுண்டுகள் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருக்கும்; இதனை ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் செய்துவிட முடியும் என்று எண்ணுவது அறியாமை!

"வேண்டுமானால், இந்தியை ஒரு மதிப்பிற்குரிய விருந்தாளியாக நாம் ஏற்றுக்கொள்வோம். விருந்தாளியை வீட்டிற்குள் மரியாதையோடு வரவேற்கத்தான் முடியுமே ஒழிய, அவர், வீட்டையே தனதாக்கிக் கொள்வதை நம்மால் அனுமதிக்க முடியாது"

என்று நாடாளுமன்றத்தில் காங்கிரசு உறுப்பினராக உள்ள கே. அனுமந்தையா, பெங்களூரில் மாணவர்களிடையே பேசும் பொழுது கூறினர்.

மொழிப் பிரச்சினையில் வலது கம்யூனிஸ்டு

மொரார்ஜி செயலுக்குக் கண்டனம்

இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாக நீடிக்கவேண்டும் என்று திருச்சியில் நடைபெற்ற தமிழக வலதுசாரிப் பொதுவுடைமைக் கட்சியின் நிர்வாகக் குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

மாநிலச் சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் தமிழக அமைச்சர் திரு. மாதவனின் கருத்துக்களை மொரார்ஜி தேசாய் கண்டித்ததோடு மட்டுமன்றி அவரை இராஜினமா செய்யவேண்டும் என்றும் கேட்டது தவருனதாகும் என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'நேரு உறுதிமொழியை நிறைவேற்றுக'

இடதுகம்யூனிஸ்டு வற்புறுத்தல்

இந்தித் திணிப்பைக் கண்டித்தும், நிர்வாகத்தில் மாநில மொழிகள் பயன்படுத்தப்படுவதை வரவேற்றும் மதுரையில் கூடிய தமிழ்நாடு இடதுசாரி பொதுவுடைமைக் கட்சியின் மாநிலக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாகக் காலவரையறையின்றி நீடிக்கும்' என்று மறைந்த பண்டித நேரு அளித்துள்ள வாக்குறுதியை சட்டபூர்வமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்திக்குப் போடப்படும் தண்டத் தீனி!

ஓர் எடுத்துக்காட்டு!

தமிழகத்தைத் தவிர மற்ற மாநிலங்கள் இந்தியை இணைப்பு மொழியாக ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், இந்த மொழிப் பூசலில் கருநாடகத்தையும், மற்ற தென் மாநிலங்களையும் இழுக்க வேண்டாம் என்று தாம் தமிழகச் சட்ட அமைச்சரிடம் கூறியதாகவும் மைசூர் மாநிலச் சட்ட அமைச்சர் கண்டி கூறியிருக்கிறார்.

அமைச்சர் பேச்சைக் கண்டித்து ஆசிரிருக்கு எழுதப்பட்டுள்ள எண்ணற்ற வாசகர் கடிதங்களைப் பார்க்கும்பொழுது, 'அமைச்சர் பேச்சு மக்கள் கருத்தை எதிரொலிக்கிறது' என்று நம்மால் முடிவு செய்ய முடியவில்லை.

மாணவர்களை ஊக்குவிக்கவும், உற்சாகமூட்டவும் தரப்பட்டுவரும் உதவித் தொகைகளால் அவர்களை இந்தியை ஏற்கச் செய்வதில் வெற்றி கிடைத்துள்ளது—பள்ளிகளில் இன்று கற்பிக்கப்படும் இந்தி பொதுமக்களுக்கு அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் எந்த அளவுக்குப் பயன்படுகிறது—என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறின பின்னரே அமைச்சர்கள், தாங்கள் மக்கள் சார்பாகப் பேசுவதாக உரிமை கொண்டாட முடியும்.

அண்மையில் மைசூர், 'ரியாசத் இந்திப் பிரசார சமிதி' நடத்திய பட்டமளிப்பு விழாவில், சமிதியின் தலைவர் வரவேற்புரை நிகழ்த்தியுள்ளது, ஆங்கில மொழியில்!

அமெரிக்காவில் இரா. செழியன்

கடந்த ஆகஸ்டு 16-ஆம் நாள் மேலை நாட்டுச் சுற்றுப்பயணத்தைத் துவக்கிய 'நம் நாடு' ஆசிரியர் இரா. செழியன் எம்.பி. அவர்கள், மாண்டிரீலில் உலகப் பொருட்காட்சியைப் பார்க்க இரண்டு நாள் தங்கிவிட்டு, இங்கிலாந்தில் 10 நாட்கள் தங்கி பல இடங்களுக்குச் சென்றுவிட்டு, மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து, செப். 15-ஆம் நாள் அமெரிக்கா சென்றடைந்தார்.

அங்கு அக்டோபர் 31-ஆம் நாள் வரை சுற்றுப்பயணம் செய்வார்.

பின்னர், அங்கிருந்து புறப்பட்டு பிலிப்பைன்ஸ், மணிலா முதலிய நாடுகளுக்குச் சென்று, நவம்பர் 9-ஆம் நாள் சிங்கப்பூர் வந்து அங்கிருந்து சென்னை திரும்புகிறார்.

நீதிமன்றத்தில் தமிழ்

அமைச்சர் மாதவன் அறிவிப்பு

"உயர் நீதிமன்றத்தில் தமிழ், ஆங்கிலம் நிரந்தரமாகப் பயன்படுத்தும் இரு மொழிக் கொள்கைதான் தமிழக அரசாங்கத்தின் கொள்கையாகும்"

என்று தமிழகச் சட்ட அமைச்சர் செ. மாதவன், தஞ்சை வழக்கறிஞர்கள் சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியும் இக்கருத்தை ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அவர் சொன்னர்.

மாவட்ட நீதிபதிகள் அதற்குக் கீழே உள்ள நீதிமன்றங்களில் சான்றுகளைத் தமிழ் மொழியிலே பதிவு செய்வதற்கும், தீர்ப்புகளைத் தமிழ் மொழியில் எழுதுவதற்கும் அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியின் யோக்கியதை இதுதான்!

"இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னல் நாட்டில் தேசிய உணர்ச்சி அலைமோதிக்கொண்டிருந்தது!

ஒவ்வோர் இடத்திலும், மக்கள் தாமாகவே முன்வந்து, இந்துஸ்தானி கற்றுக்கொண்டார்கள்.

இந்துஸ்தானி (அல்லது இந்தியை)க் காட்டிலும் வளர்ச்சியையும், எளிமையையும் பெற்றிருந்த இந்திய மொழிகள் ஏறத்தாழ ஆறு இருந்தும்கூட அன்று அவர்கள் இந்தியைக் கற்றார்கள்.

15 ஆண்டுகட்கு முன்பு இலங்கையிலும் இதே போன்ற நிலைமைதான் இருந்தது.

தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணம் பகுதியிலிருந்த அவ்வளவு பள்ளிகளும் அப்பொழுது சிங்கள மொழியை விரும்பிக் கற்பித்து வந்தன.

சிங்கள மொழியைத் 'தேசிய மொழி' என்று கூறி, அதைத் திணிக்கும் முயற்சி தொடங்கியவுடனேயே, அதே பள்ளிகள் சிங்களத்தைக் கற்பிக்க மறுத்து விட்டன!

தங்கள் கீழ்த்தரமான — அறிவற்ற அவசரப் போக்கினல், இந்தியாவின் தேசியத் தன்மையை எவ்வளவு தேக்கிவிட்டோம் என்பதை, வெறிபிடித்த இந்தி ஆதரவாளர்கள் உணரவே இல்லை! அவர்கள், முரட்டுத் தனமாக இந்தியை முன்னுக்குத் தள்ளினர்கள்! இப்படிச் செய்ததனலேயே அவர்கள் விரும்பியது நடந்துவிடவில்லை!

சான்ருக, இந்திய அரசின் பத்திரிகைகள் பதிவு அதிகாரியின் 1964-ம் ஆண்டு அறிக்கை—ஆங்கிலம், இந்தி இரண்டிலும் அச்சிடப்பட்டன; ஆனல், இந்தி வெளியீட்டின் ஐந்து பிரதிகள் கூட விற்பனை ஆகவில்லை''

என்று அஞ்சல் சர்க்கார் என்ற எழுத்தாளர், 'தேசியத்தின் மொழி' என்ற தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ரோமாபுரி!

இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

[23—9—67 இதழ் தொடர்ச்சி]

'வடிகன்' நகரம், ஒரு தனிப்பட்ட தேசமாக இருக்கிறது. அதற்கு அரசராகப் போப் இருக்கிறார். மொத்த நிலப் பரப்பு 109 ஏக்கர்; மக்கள் தொகை 1,000. 56 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வடிகனில் இருக்கிறார்கள்.

இத்தாலி நாடு, இந்தியாவில் பத்தில் ஒரு பங்கு இருக்கும். மக்கள் தொகை 5-கோடி 27 இலட்சம்.

இங்கு வழங்கப்படும் நாணயத்தின் பெயர் 'லிரா'. ஒரு ரூபாய்க்கு 82 லிராக்கள், செலாவணியில் ஈடாகும்.

ரோம் நகரைத் தவிர முக்கியமான நகரங்கள்—மிலான், வெனிஸ், நேபிள்ஸ், பிரான்ஸ் முதலானவைகளாகும்.

இத்தாலியின் வட பகுதியில் ஆல்ப்ஸ் மலை இருக்கிறது. இத்தாலியையும்—சுவிட்சர்லாந்தையும் இணைக்க 3½ மைல் தூரமுள்ள சுரங்கப் பாதை ஆல்ப்ஸ் மலையில் அமைக்கப்பட்டுள்ளது. அதே போல், இத்தாலிக்கும்—பிரான்சுக்கும் இடையில், 7¼ மைல் தூரத்துக்கு ஒரு சுரங்கப் பாதை இருக்கிறது. உலகில் மிக நீண்ட சுரங்கப் பாதை இதுதான்!

இரண்டாவது உலகப் போருக்கு முன்பு விவசாய நாடாக இருந்த இத்தாலி, இப்பொழுது தொழில் வள நாடாக முன்னேறி வருகிறது. இரும்புத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு, கனரகத் தொழில்கள் வளர்ந்துள்ளன; கார் உற்பத்தி பெருகியுள்ளது. மின்சாரச் சாமான்கள், இரசாயனப் பொருள்கள் செய்யப்படும் துறைகள் விரிவடைந்துள்ளன. புகையிலையும், உப்பும் அரசாங்கக் கட்டுப்பாட்டில் விற்பனை செய்யப்படுகின்றன.

அரசியல் அமைப்பில், இரண்டு அவைகள் உள்ளன. 80 ஆயிரம் வாக்காளர்களுக்கு ஒருவர் விதம் தேர்ந்தெடுக்கப்பட்டு கீழவை (சேம்பர் ஆப் டெபுடி) என்பது அமைகிறது. இப்பொழுது அதில் 630 உறுப்பினர்கள் இருக்கின்றனர். மேலவையில் (செனட்) 315 உறுப்பினர்கள் உள்ளனர். ஐந்தாண்டுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுகிறது. 1963-ல் நடைபெற்ற தேர்தலில், கிறித்துவ டெமாக்ரடிக் கட்சி பெரிய கட்சியாக வந்தது. அந்தக் கட்சியைச் சேர்ந்த ஆல்டோ மோரோ என்பவர் முதலமைச்சராக இருக்கிறார்.

இரண்டாவது நாள்—நான் புறப்படுவதற்கு முன்—இந்தியத் தூதுவரகத்தில் பணியாற்றும் திரு. வைத்தியநாதன் அவர்கள் இல்லத்தில் நமது பக்கத்து உணவு அருந்தினேன். அவர், அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர்.

ரோம் நகரத்திலிருந்து மாலை 6-மணிக்கு விமானம் மூலம் ஜெனிவாவுக்குப் புறப்பட்டேன். விமானத்தில் என் பக்கத்திலிருந்த ஒருவர், 'அற்புதம், அற்புதம்' என்று என்னைப் பார்த்துக் கூறினர்; ரோமில் உள்ளக் கலைத் திறமையைப் பற்றி அவர் அப்படிக் கூறுகிறார் என்று நினைத்தேன்; அவர் தொடர்ந்து, 'ரோமில் தரப்பட்ட ஒயின் அற்புதம், அற்புதம்' என்று தன் கையிலிலுள்ள ஒரு சிறு புட்டியை அழகு பார்த்துக்கொண்டிருந்தார்! நான் என் கையிலிருந்த பத்திரிகையைப் புரட்ட ஆரம்பித்தேன்!

மொழிப் பிரச்சினை விரைவில் தீர ஒன்றுபடுவீர்!

தமிழகத் தலைவர்களுக்கு அமைச்சர் மாதவன் வேண்டுகோள்

'அரசியல் சட்டத்தை மாற்றுவதே பரிகாரம்' என விளக்கம்

"தமிழகத் தலைவர்களாக இருப்பவர்கள் தங்கள் கருத்து வேற்றுமைகளை சிறிது காலம் ஒத்திவைத்துவிட்டு, மொழிப் பிரச்சினையில் திட்டவட்டமான முடிவை எடுக்க வேண்டும்!

"'இந்தி, என்றாவது ஒரு நாள் வரும்' என்பதை நாம் ஒப்புக்கொண்டால், இப்போதே நாம் இந்தி மொழியைக் கற்கத் தயாராக வேண்டும்—இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்!

"'இந்தி தேவை இல்லை; ஒரு நாளும் இந்தியை அனுமதிக்கமாட்டோம்' என்றால், 'இந்தியாவின் இணைப்பு மொழியாக ஆங்கிலம்தான் இருக்கவேண்டும்' என்று தெளிவாகக் கூறிவிட வேண்டும்.

"இத்தகைய ஒரு குரலை பெரியார் தலைமையில் தமிழகத்துத் தலைவர்கள் கொடுத்தால் போதும்! போராட வேண்டியதில்லை—அதற்கு, இளைஞர்களாகிய நாங்கள் இருக்கிறோம்"

என்று, சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள், சென்னை—மயிலையில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாவில் பேசுகையில் பெரியார் அவர்களைப் பார்த்து வேண்டுகோள் விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில், இந்தியைத் திணிக்க, டில்லி செய்துவரும் முயற்சிகளையும், டில்லியில் மொரார்ஜியுடன் நேருக்கு நேராகத் தாம் வாதிட்டபோது, டில்லி அரசின் உள்நோக்கம் வெளிப்பட்ட விதத்தையும் எடுத்து விளக்கினார்.

'இந்தி திணிக்கப்படவில்லை' என்று பக்தவத்சலமும். 'நேரு வாக்குறுதியைச் சட்டமாக்கும் மசோதா அடுத்த கூட்டத்தில் கொண்டுவரப்படும்' என்று காமராசரும் பேசிவருவதற்குப் பதிலளிக்கும் வகையில் பல சான்றுகளை எடுத்து விளக்கினார்.

ஒரு புறத்தில் மும்மொழித் திட்டத்தையும் ஆதரித்துக்கொண்டு, இன்னொரு புறத்தில், உத்தரப் பிரதேசத்துக்காரர்களை ஆங்கிலம் படிக்கும்படி நாம் கட்டாயப்படுத்த முடியுமா?' என்று கேட்கும் பக்தவத்சலத்தின் முரண்பட்ட வாதத்தை எடுத்துக்காட்டி, அவருடைய உண்மைச் சொரூபத்தை அம்பலப்படுத்தினார்.

'தி. மு. க. ஆட்சியின் மொழிக் கொள்கை புரியவில்லை' என்று கூறும் காமராசருக்குப் புரியும் வகையில் பல விளக்கங்களையும் கூறினார்.

கொண்டுவரப்பட இருப்பதாகக் கூறப்படும் ஆட்சிமொழித் திருத்த மசோதாவில் நேருவின் உறுதிமொழி அடங்கியிருப்பதாகக் கூறுவது பித்தலாட்டம் என்றும், அதனை நாம் ஏற்கவில்லை என்பதை டில்லிக்கு அறிவித்துவிட்டதாகவும் அமைச்சர் மாதவன் அறிவித்து மேலும் குறிப்பிட்டதாவது :—

"'இந்திதான் ஆட்சிமொழி; ஆங்கிலமும் இருக்கலாம்; சில காரியங்களுக்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படும்' என்பதுதான் மசோதாவின் உள்ளடக்கம்; இதுதான் நேருவின் உறுதிமொழியா? 'இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் நீடிக்கும்' என்ற நேருவின் உறுதிமொழி எங்கே?

ஆட்சிமொழிச் சட்டத்தைத் திருத்துவதாலேயே மொழிச் சிக்கல் தீர்ந்துவிடாது. சாதாரணச் சட்டம் நாடாளுமன்றத்தில் எளிதில் நிறைவேற்றப்பட்டுவிடக் கூடியது; அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டும்; அப்போதுதான் மொழிச் சிக்கல் நிரந்தரமாகத் தீரும்; 'அரசியல் சட்டத்தையேதிருத்த வேண்டும்' என்பதுதான் நமது கோரிக்கை.

எனவே, மொழிப் பிரச்சினையை விரைந்து ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். இதற்கு, நம் தமிழ்நாட்டுத் தலைவர்களெல்லாம், தங்களுக்கு இருக்கும் பல்வேறு கொள்கைகளையும், ஒதுக்கிவைத்துவிட்டு, இந்த ஒரு பிரச்சினை தீரும்வரையிலாவது ஒன்றுபட்டு இருந்து குரல் எழுப்ப வேண்டும் என்று இந்த நல்ல நாளில் வேண்டிக்கொள்கிறேன்.

அந்தப் பிரச்சினை தீர்ந்த பிறகும் கூட ஒன்றுபட்டு இருந்தால் நல்லதுதான்; அப்படி நிலைமை ஏற்பட வேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன்."

மறுப்பு

எங்கள் கல்லூரிக்கு (சர் தியாகராயர் கல்லூரி) பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் அவர்களும் சட்டம் பேரவைத் தலைவர் ஆதித்தனார் அவர்களும், 30—8—67-ல் வந்திருந்து, தமிழ் மாணவர் மன்றத் தொடக்க விழாவில் சிறப்புற உரையாற்றிச் சென்றனர்.

மாணவர்களும் ஆசிரியர்களும் முதலிலிருந்து இறுதிவரை, அமைதியோடு இருந்து அவர்கள் பேச்சினை மகிழ்ச்சி ஆரவாரத்தோடு கேட்டனர்; கூட்டமும் இனிதே முடிந்தது.

உண்மை நிலைமை இவ்வாறிருக்க, 2—9—67 தேதி காங்கிரசு இதழ் ஒன்றில், இலக்குவனாரையும், ஆதித்தனாரையும் பேசவிடாது மாணவர்கள் தடுத்ததாகவும் இறுதியில் இச்செய்தியினை முதல்வரிடம் முறையிட்டதாகவும் திரித்துக் கூறப்பட்டுள்ளது.

அந்த ஏட்டில் கூறியுள்ளபடி, இருவரது பேச்சும் எந்தவோர் மாணவராலும் தடுக்கப்படவுமில்லை—முதல்வரிடம் முறையிடப்படவுமில்லை.

மாணவர்களின் பெரு விருப்பத்திற்கிணங்க, 'மன்றத்தின் தலைவன்' என்ற முறையில் தலைமை உரையில், ஆதித்தனாரை, 'சட்ட மன்றத்தில் தமிழ்ப் பணி' பற்றி விளக்குமாறு வேண்டினேன்.

இலக்குவனாரிடம், 'ஆதிக்க இந்திக்கு மாணவர்களிடம் அன்று உணர்வூட்டி வழிகாட்டியதுபோல் இன்றும் காட்டுங்கள்' என்று வேண்டினேன். அவர்களது கருத்துரைகளும் அவ்வாறே அன்று அமைந்தன.

"சிறப்பும், அமைதியும் பூண்டு நிகழ்ந்த விழாக் கண்டு சீற்றங் கொண்ட சில தமிழ்த் துரோகிகளே இவ்வாறு கயிறு திரித்திருக்கின்றனர்" என்று வண்ணை தியாகராயர் கல்லூரி தமிழ் மாணவர் மன்றத் தலைவர் அரு.செல்லம் பாயிரம் அறிவிக்கிறார்.

நேருவுக்குப்பின் தோன்றியுள்ள விடிவெள்ளி!

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதில் வெற்றி கண்ட ஒருவர்!

அண்ணா பிறந்த நாள் விழாவில் குன்றக்குடி அடிகளார் புகழ்மாலை

"அறிஞர் அண்ணா அவர்கள் இந்திய நாட்டின் தலைமையமைச்சராக வேண்டும்' என்று பலர் வாழ்த்தினார்கள்; இந்தப் பதவியைப் பெறுவதால் அவருக்குப் பெருமையில்லை; அது, தமிழுக்கும் தமிழர்கட்கும், இந்திய நாட்டுக்குமே பெருமை தரக்கூடியதாகும்"

என்று, குன்றக்குடி அடிகளார், சென்னை மயிலையில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்; அவர் மேலும் கூறியதாவது :—

"அறிஞர் அண்ணா அவர்கள், தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்குமுன், காமராசரையும், பக்தவத்சலத்தையும், மற்றும் பல தலைவர்களையும் சென்று பார்த்துவந்தார். அப்படிப் பார்க்கவேண்டும் என்ற நிலை அவருக்கு இல்லை; இருந்தும், போய்ப் பார்த்தார் என்றால், 'அது ஓர் இராஜதந்திரம்' என்று நான் சொல்லமாட்டேன்—அது அவரது உள்ளார்ந்த ஒழுக்கப் பண்பை எடுத்துக்காட்டுவதாகும்.

நான், சுமார் ஆறாண்டுக்கு முன்பே, 'இந்திய அரசியல் வானில் நேருவுக்குப் பின்னால் ஒரு புதிய விடிவெள்ளி தோன்றவிருக்கிறது' என்று கூறினேன்.

நேருவிடம் எனக்குத் தனி மதிப்பு உண்டு. நேருவைப் போன்ற அறிவாற்றலும், பண்பாடும் கொண்ட அறிஞர் அண்ணா அவர்களைத்தான் அப்படிக் குறிப்பிட்டேன்.

வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமை காணும் பண்பு—உயரிய பண்பாகும்; அந்தப் பண்புக்கேற்ப நடந்து அதில் வெற்றியும் பெற்றவர் அறிஞர் அண்ணா அவர்கள்தாம்.

நமக்கென்று ஒரு பாரம்பரியம்—மரபு உண்டு; அந்த மரபைப் பேண—தமிழ் இனத்தின் பண்பாட்டைக் காக்க அறிஞர் அண்ணா அவர்கள் அருந்தொண்டாற்றி வருகிறார்கள். அத்துடன், தமிழர் சமய நெறி முறைகளிலும் பல புதுமைகளைக் கொண்டுவரவேண்டும்.

அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இரு பெரும் சாதனைகள் நடைபெறவிருக்கின்றன.

ஒன்று—அடுத்த ஆண்டு இங்கே நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாடு; மற்றொன்று—திருவள்ளுவரின் 'ஈராயிரம் ஆண்டு' விழா.

இந்த இருபெரும் நிகழ்ச்சிகளையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடி தமிழுக்கும், தமிழ் இனத்துக்கும் சிறப்புத் தேடித்தர அண்ணா அரசு எல்லாவற்றையும் செய்யும் என்று நம்புகிறேன்.

தமிழக அரசு இப்போதே—எங்கும் தமிழ் மணம் பரப்பி வருவதுடன், திருக்குறளையும் பரப்பி வருகிறது.

நமது அமைச்சர் கருணாநிதி அவர்கள், பேருந்து வண்டிகளிலும் திருவள்ளுவர் படத்தை வைத்து, திருக்குறளையும் எழுதி வைத்திருக்கிற செய்தி நம்மையெல்லாம் மகிழச் செய்கிறது. இதற்காக அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களைப் பாராட்டுகிறேன்.

உலகெலாம் தமிழ் மணமும், குறள் மணமும் பரப்ப இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் பயன்படும் வகையில் அண்ணா ஆட்சி ஆவன செய்யும் என்று நம்புகிறேன்."

'அப்பாதுரையாரின் தமிழ்ப் பணிக்கு அருந்துணை'

அலமேலு அம்மையார் தொண்டுக்குப் பாராட்டு

தமிழுக்கு, 'இனிமை' என்று பெயர் சொன்னார் பாவேந்தர் பாரதிதாசன். அந்த இனிமைத் தமிழை அப்பாதுரையார் நமக்கு அளிக்க, அவருடைய துணைவியார் திருமதி அலமேலு அம்மையார்தான் காரணம்.

புலவர்கள் ஏடுகளைப் படிப்பதாலேயே இனிமை ஏற்பட்டுவிடாது! இல்லாமையில் இனிமையைத் தேடிக்கொண்டிருக்க முடியாது! தமிழுக்கு அவர் தொண்டாற்றுவதற்கு நல்ல உற்சாகம் தந்துகொண்டிருந்தவர்—அவருடைய அத்தனைப் பணிகளையும் நமக்கு அளிக்கச் செய்தவர்—அவருடைய துணைவியார் அவர்கள்தாம்!

இந்தி எதிர்ப்பு இன்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது; ஆனால், இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் துவக்கக் காலத்தில் திருமதி அலமேலு அம்மையார் அவர்களை நான் மறியல் செய்யும்படிக் கேட்டுக்கொண்டேன். வேண்டுகோளை ஏற்று அவர்கள், தொண்ட மண்டலம் துளுவ வேளாளர் பள்ளியில்—கூட்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும்—உற்சாகம் குறையாமல் நாள் தவறுமல் தன்னந்தனியாக நின்று மறியல் செய்ததை மறக்க முடியாது! அன்று அவரைப் பார்த்தபோது, அவரிடத்திலே எனக்கு ஏற்பட்ட மதிப்பு, என்றும் மாறாத மதிப்பாகும்!

அப்பாதுரையாருக்குப் புலமை வளர்ந்ததில் ஆச்சரியமில்லை! வீட்டுத் தொல்லை இல்லை என்றால்தான் நாட்டுக்குத் தொண்டாற்றுவதில் தொல்லை இல்லாமல் இருக்கும்.

இல்லறத்தில் எவ்வளவு தொல்லை இருக்கிறது என்பது, துறவு நிலையில் உள்ள குன்றக்குடி அடிகளாருக்குத் தெரிந்திருக்காது; ஆனால், அவருக்கு வேறு சில தொல்லைகள் இருக்கும்; அதனையும் நான் அறிவேன்; இருந்தாலும், இல்லறத்தில் இருந்துகொண்டே நாட்டுப் பணி செய்வதுதான் கடினம்—அதுதான் சிறப்பானது!

நமது அப்பாதுரையார் அவர்கள், வறுமை நிலையிலும் தொல்லையில்லாமல் தமிழ்த் தொண்டும், நாட்டுத் தொண்டும் புரிய உடனிருந்து உற்சாகமளித்துக் கொண்டிருந்த அம்மையார் அவர்களுக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

—அறிஞர் அண்ணா

(அப்பாதுரையார் பொன் விழாவில்)

பெரியாரும் அண்ணாவும் இல்லையென்றால்....

எச். வி. ஹண்டே விளக்கம்

"இன்று ஆந்திரத்திலும் மைசூரிலும் காங்கிரசு ஆட்சி இருக்கிறது என்றால், அங்கே தி.மு.க. போல ஒரு வலிமைமிக்க எதிர்க்கட்சி இல்லை—அண்ணாபோல அங்கு ஒருவர் இல்லை!

"அங்கு காங்கிரசுக்கு வாக்களித்தவர்களெல்லாம் மனப்பூர்வமாக வாக்களிக்கவில்லை; 'வேறு ஒரு கட்சி இல்லையே' என்று -- வேதனையுடன்தான் காங்கிரசுக்கு வாக்களித்தார்கள். அங்கெல்லாம் அண்ணா அவர்களுடன் தொடர்புகொண்டு ஒரு வலிமைமிக்க இயக்கத்தை ஏற்படுத்த வேண்டும்; அப்படிச் செய்தால், அண்ணா அவர்கள் இந்தியாவுக்கே தலைமையமைச்சராக வருவார், அப்படி வரவேண்டும் என்று விரும்புகிறேன்"

என்று சுதந்தரக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். வி. ஹண்டே நேற்று மயிலாப்பூரில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது :—

"பெரியார் அவர்களுடன் பணியாற்றுவது என்றால், 'எல்லா தியாகமும் செய்யத் தயாராயிருக்க வேண்டும்' என்று

பதில்வேடு

காந்தியும் நேருவும்கூட!

★ சுதந்தரத்துக்காகப் பாடுபட்ட காலத்திலும், காந்தியும் நேருவும் ஆங்கிலத்தில்தான் எழுதினார்கள்—பேசினார்கள்!

★ இப்போதும் காங்கிரசுத் தீர்மானங்கள் ஆங்கிலத்தில்தான் எழுதப்படுகின்றன!

★ அண்மையில் ஜனசங்கம் கூட தனது அறிக்கை ஒன்றினை ஆங்கிலத்தில்தான் வெளியிட்டது!

பம்பாய் வரவேற்புக் கூட்டத்தில் **சாக்ளா.**

பிறப்பு

சென்னை 4-வது வட்ட தி.மு.க. செயலாளர் தோழர் பி. கே. மூர்த்தி அவர்களின் துணைவியார் திருமதி சாந்தகுமாரிக்கு, 5–9–67 அன்று ஆண் குழந்தை பிறந்தது. பி. கே. மூர்த்தி தம்பதிகள், அண்ணா தலைமையில் திருமணம் செய்து கொண்டவர்கள் ஆவர். (இதன் நினைவாக ரூ. 1 வரப்பெற்றோம்—நன்றி.)

* * *

சென்னை 86-வது வட்ட தி.மு.க. உறுப்பினரும் அறிவு வளர்ச்சி மன்றத்தின் பொறுப்பாளருமான தோழர் ஜெ. பாபு அவர்களின் துணைவியார் பிரேமா, 16–9–67-ல் ஓர் ஆண் மகவு பெற்றெடுத்தார்கள். தாயும் சேயும் நலம். (இதன் நினைவாக ரூ. 2 வரப்பெற்றோம்—நன்றி).

நண்பர்கள் கூறுவார்கள்.

"பெரியார் அவர்கள் இல்லாமல் இருந்தால் — அவரிடமிருந்து வந்த அண்ணா அவர்களும், தி. மு. கழகமும் இல்லை என்றால்—என்ன ஆகியிருக்கும்?

"சனநாயகத்தின் அனுமதியுடன் இந்த நாட்டில் காங்கிரசைப் பதவிலிருந்து இறக்கியிருக்க முடியுமா?

'இந்து' இதழின் விந்தைத் தலைப்பு!

பண்ணுவதெல்லாம் பண்ணி விட்டு, 'உண்மை விளம்பி'கள் போல், ஊருக்குக் காட்டிக் கொள்ளுவார்கள் சில பேர்!

அதுபோல இருக்கிறது— 'இந்து' நாளிதழ், 23—9—67 அன்று ஒரு செய்திக்குத் தந்த தலைப்பு!

ஊரிலே சர்க்கரைத் தட்டுப் பாடு — உண்மைதான்; அதற்கு யார் காரணம்?— அதுவும் தெரியும் 'இந்து'வுக்கு!

இட்டுக்கட்டிப் பொய்யைப் பணமாக்கும் ஏடு அல்ல 'இந்து'! இருந்தும், ஏனோ இப்படி ஒரு செய்தித் தலைப்பு!

Card holders Not Able to get This Week's Sugar.

என்ன பொருள் இதற்கு?— 'அட்டைக்காரர்கள் இந்த வார சர்க்கரையைப் பெற முடியாது'—இதுதானே!

உலகம் போய்க்கொண்டிருக்கும் வேகத்தில், 14, 16 பக்கங்கள் உள்ள செய்திகளைப் படிக்காமல், தலைப்புகளைப் பார்த்து விட்டுப் பக்கங்களைத் தள்ளுவோரே அதிகம்! கீழே இருக்கும் செய்தியைப் படிக்காமல் வெறுந்தலைப்பை மட்டும் படித்தால் என்ன எண்ணத்தோடே போவார்கள்?

ஏனென்றால் கீழே இருக்கிற செய்தி வேறென்னவோ பொருள் தருகிறதே!

செய்தி இதுதான்:—

"சென்னை நகரின் பல பகுதிகளில், ஏற்கனவே குறைத்துக் கொடுக்கப்படும் சர்க்கரையின் இந்த வார கோட்டாவைப் பெற முடியவில்லை. காலையோ, மாலையோ பங்கீட்டுக் கடைக்குப் போகிறவர்கள், தங்களை வரவேற்கும் 'சர்க்கரை இருப்பு இல்லை' என்ற அறிவிப்பைப் பார்த்துவிட்டு ஏமாறி வீடு திரும்புகிறார்கள்!

"சர்க்கரையை ஆலைக்கு வெளியே அனுப்புவதற்கான உத்தரவை மத்திய அரசு இன்னும் அனுப்பாததே இந்தத் தொல்லைக்குக் காரணம்" என்று, சிவில் சப்ளைத் துறை அதிகாரி சொன்னார். சிவில் சப்ளைத்துறை லாரிகள் ஆலைகளில் காத்துக் கிடக்கின்றன. நாளை மாலை உத்தரவு வரக்கூடுமென்றும், 25-ந் தேதிக்குள் நிலைமை சுமுகமாகலாம் என்றும் அவர் சொன்னார்.

"இந்த வாரம் தங்கள் சர்க்கரைக் கோட்டாவைப் பெற முடியாதவர்கள் அடுத்த வாரம் பெறலாம் என்றும் அந்த அதிகாரி சொன்னார்."

இதுதான் 'இந்து' இதழின் செய்தி! இதற்குத்தான் அந்தத் தலைப்பு!

செய்தி வெளியாகியிருப்பது சனி காலை!

"திங்கள் காலை பங்கீட்டுக் கடைக்குப் போய் இரண்டு வார சர்க்கரையையும் சேர்த்து வாங்குகிற வரைக்குமாவது, பொதுமக்கள், ஆட்சி நடத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்டிக் கொண்டிருக்கட்டுமே! அதற்கு, ஏதோ நம்மால் ஆன கைங்கரியத்தை நாமும் செய்து வைப்போமே"—இதுதான் 'இந்து'வின் நோக்கமோ?

நடுநிலைமை நாளிதழ் 'இந்து'—என்று சிலர் சொல்லுகிறார்களே — அது எவ்வளவு பேதமை பார்த்தீர்களா?

"மத்திய அரசின்மீது எதற்கெடுத்தாலும் தி.மு.க. அரசு பழிபோட்டுத் தப்ப முயலுகிறது" என்று காங்கிரசுக்காரர்கள் சொல்வதை மட்டும் கொட்டை எழுத்துக்களில் தலைப்பு இட்டுச் செய்தி வெளியிட முடிகிறது அல்லவா?

இந்தச் செய்தியின்படி— தலைப்பின்படி—அன்று, மத்திய அரசின் தாமதத்தினால் தானே சர்க்கரை கிடைக்கவில்லை? அதுதானே தொல்லையின் தொடக்கம்? அந்தப் பொருள் தொனிக்கிற வகையில் தலைப்புத் தரலாம் அல்லவா?

அது அவர்கள் விருப்பம்— நாம் யார் சொல்ல? ஆனால், ஊருக்கெல்லாம் நியாயம் சொல்லும் பெரியவர்களுக்கு, இந்தச் சின்ன விஷயம் மட்டும் புரியவில்லையோ?

"இந்த வார சர்க்கரையை, அடுத்த வாரம் சேர்த்து வாங்கிக் கொள்ளலாம்" என்ற சலுகையை அறிவிப்பதே இப்படி என்றால், இந்த வாரம் சர்க்கரை வாங்காவிட்டால், 'போனது போனதுதான்' என்ற நிலை இருக்குமானால், ஊரை அதம் செய்யமாட்டார்களா?

திருமண வீட்டிலேயே பந்தற்காலைக் கட்டிக்கொண்டு அழுகிறவள், செத்த வீட்டில் சும்மா இருப்பாளா?

'ஆனால் சூரிய வாரம்; ஆகாவிட்டால் சோமவாரம்'—விஷயம் அவ்வளவுதான்!

—பூரணன்

மலேசியா — சிங்கப்பூர் தி.மு.க. பிரச்சினை

தமிழகக் காங்கிரசார்

கவனத்திற்கு:

"1950—60 துவக்கக் காலத்தில் சிங்கப்பூரில் சுற்றுப் பயணம் செய்த ஈ.வே.ரா.-வுக்குப்பிறகு,

காமராஜ், சி. சுப்பிரமணியம், எம். பக்தவத்சலம் போன்ற காங்கிரசுக் கட்சித் தலைவர்களும்,

தி.மு.க. தலைவர்களான க. இராசாராம்—மனோகரன்—அண்ணாதுரை — செழியன் — சிட்டிபாபு — நெடுஞ்செழியன் ஆகியவர்களைப்போல் சிங்கப்பூர் — மலேசியா நாடுகளுக்கு வந்துசென்றிருக்கிறார்கள்."

"தி.மு.க. தலைவர்கள் வந்தபோது, அவர்கள் கூட்டங்களில் சிங்கப்பூர் தலைமையமைச்சர் லீ குவான் ஈ, சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் இராசரத்தினம், மலேசிய இந்தியக் காங்கிரசுத் துணைத் தலைவர் மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்துகொண்டு பேசியிருக்கின்றனர்."

"மலேசியாவுக்குத் துரோகமாக நினைக்கவோ நடக்கவோ வேண்டுமென்று இங்குள்ள தமிழர்களை இந்தியாவிலிருந்து வந்துசென்ற எந்த ஓர் அரசியல் கட்சித் தலைவரும் கேட்டுக்கொண்டு பேசவில்லை."

"இங்குள்ள தமிழர்களின் மனப்பான்மையைத் திரிக்கும் அளவுக்கு—கெடுக்கும் அளவுக்கு—வந்துசென்ற எந்த தி.மு.க. தலைவர்களும் இதுவரையில் பேசியதில்லை."

மேற்கண்ட நான்கு பகுதிகளும், 21, 22—9—67-ம் நாட்களில் 'இந்து' நாளிதழில், வி.டி. சம்பந்தம் என்பார் எழுதி வெளிவந்த கட்டுரைகளிலிருந்து எடுக்கப்பட்டது.

மலேசியா—சிங்கப்பூர் நாடுகளில் உள்ள தி.மு.க. பற்றியும், இங்குள்ள தி.மு.க. பற்றியும் எழுப்பப்பட்டுவரும் சில முன்பின் யோசனையில்லாத — பொருத்தமில்லாத செய்திகளைத் தொடர்புபடுத்தி இங்குள்ள காங்கிரசார் கழகத்தைத் தாக்கிப் பேசியும், எழுதியும் வருகின்றனர்.

அவர்களது மேலான பார்வைக்கு மேற்கண்ட கட்டுரைப் பகுதிகள் வைக்கப்படுகின்றன.

—'பாக்சர்'

இசை நிகழ்ச்சி

மதுரை பகுத்தறிவுப் பாசறை சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா; 28-9-67 இரவு 7-மணிக்கு அண்ணா திடலில்—அப்துல் சலாம் தலைமையில், இராசபாளையம் மணி—சாமி குழுவினரின் 'யாருக்காக தி.மு.க.' என்ற கலை நிகழ்ச்சி நடைபெறும்.

தமிழக அரசு வீட்டு வசதி போர்டு

ஒப்பந்தப் புள்ளி

அறிவிப்பு

Ref. No 44843/Dev. II/67

கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

உறைமீது வேலையின் பெயரும், ஒப்பந்தம் கோருவோர் பெயரும் குறிப்பிடப்பட்டு, 19—10—1967 மாலை 3 மணிக்குள் கீழே கையொப்பமிட்டவரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அதே நாள் மாலை 4 மணிக்கு நேரில் இருக்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் உடைத்துப் பார்க்கப்படும்.

வேலையின் பெயர்

மேற்குச் சென்னைப் புறநகர்த் திட்டத்தில் எண். 452—459 பிளாட்களையும், குழந்தைகள் விளையாட்டுத் திடலின் பகுதியையும் தூர்த்தல்; கிழக்கு-மேற்கிலே உள்ள 80 அடி சாலைக்கு கப்பி மண் போடுதல்; வடக்கு தெற்காகவுள்ள 120 அடி சாலையிலிருந்து ஒரு கிளைச் சாலை L.S 00'—3430' அளவில் அமைத்தல்.

வேலையின் தோராய மதிப்பீடு:	ரூ. 93,600
பொறுப்புத் தொகை	ரூ. 1,405
ஒப்பந்த முறை:	முழுத் தொகை
ஒப்பந்தப்புள்ளி நமூனாவின் விலை:	ரூ. 10-ம் விற்பனை வரியும் (திரும்பப் பெற முடியாதது)

ஒப்பந்த விதிமுறை முதலானவற்றை வீட்டமைப்பு போர்டு அலுவலகத்தில் அலுவல் நடைபெறும் எந்த நாளிலும் காலை 11 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிக்குள் 9—10—1967 முதல் 19—10—1967 வரை ரொக்கம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எஸ். லோகவிநாயகம்
வீட்டு வசதி போர்டு பொறியர்
பொறுப்பில் உள்ளவர்

36, மௌண்ட் ரோடு,
சென்னை-35.
21—9—1967

மதுவிலக்கு: சில தகவல்கள்

★ 'பத்துப் புட்டி பீருக்குப் பதிலாக ஒரு புட்டி பீர் மட்டும் சாப்பிடுவோம்' என்பது, உண்மையான மனக்கட்டுப்பாடு அல்ல; 'மதுவே அருந்தக்கூடாது' என்பதுதான் உண்மையான மனக் கட்டுப்பாடு!

★ இயந்திரங்களையும் இயற்கையையும் கட்டுப்படுத்த முடிகின்ற மனிதன், பரிதாபத்துக்குரிய வகையில் தன்னைத்தானே கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறான்; இதனால் விளைவதுதான் குடி-புகை போன்ற பழக்கங்கள்!

★ மது, ஒரு பானம் மட்டுமல்ல; இந்த உலகின் ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள ஒரு சவால்!

★ வெளிநாட்டில் ஒவ்வொருவருமே குடிக்கிறார்கள் என்று உங்களில் பலர் நினைக்கிறீர்கள்; அது தவறு; ஆஸ்திரேலியாவில் 40 சதவிகித மக்களும், அதே போல் அமெரிக்காவில் 40 சதவிகித மக்களும் குடிப்பது கிடையாது!

★ குடிப் பழக்கத்தை ஒழிப்பது எப்படி என்பதனை, ஒயினை நீராகப் பருகச்சொன்ன பிரான்சு நாட்டுக்காரர்களே தீவிரமாகச் சிந்தித்து வருகின்றனர்! அங்கே அது ஒரு கல்விக்கூடப் பாடமாகவே இருக்கிறது!

★ போதை தரும் பானங்களை அகற்றுவதற்காக 'ஆல்ககால்' கலப்பற்ற சாதாரண ஆப்பிள்—திராட்சைச் சாறுகளை அங்கே உற்பத்தி செய்து வியாபாரம் செய்து வருகின்றனர்!

★ அந்த உற்பத்திகளுக்கு அரசாங்கம் மானியம் அளித்து ஊக்குவிக்கிறது!"

—மனக் கட்டுப்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் இராஜாஜி மண்டபத்தில் நடந்த கூட்டத்தில், அந்த இயக்கத்தின் சர்வதேச இயக்குநர் ஸ்மட் தெரிவித்த கருத்துக்களில் சில

அண்ணா பட ஊர்வலம்

சென்னை 44-வது வட்டம், திருவள்ளுவர் மன்றச் சார்பில் 27—9—67 காலை 8 மணிக்கு, இராமலிங்கபுரம், தோல்கேட் ஒற்றைவாடைத் தெருவில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் 59 கழகக் கொடிகள் ஏற்றி வைப்பார்; மாலை 4 மணிக்கு மு. கிருட்டினமூர்த்தி தலைமையில் அலங்கரிக்கப்பட்ட இரதத்தில், அறிஞர் அண்ணாவின் படத்துடன் ஊர்வலம் நடைபெறும்.

சென்னை—சேலையூர் இடையே அரசு பஸ்

தமிழகப் பஸ் போக்குவரத்தை அரசு வசமாக்கும் திட்டத்தின்கீழ், சென்னை—சேலையூர் பாதையை அரசு ஏற்கும்.

இந்தப் பேருந்து, சைதை—வேளச்சேரி—நாராயணபுரம் -- சந்தோஷபுரம் வழியாக சேலையூரை அடையும். மொத்த தூரம் 18 மைல்.

நடக்க இருப்பவை - பொதுக்கூட்டங்கள்

27--9--67

பொலவக்காளிபாளையம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு; தலைவர்: பி. கே. சுப்பண்ணன்; பேசுவோர்: பி. ஏ. சாமிநாதன் எம்.பி., கே. எம். இராமசாமி எம்.எல்.ஏ., வ. ச. இராமராசு எம்.எல்.ஏ., ஜி. பி. வெங்கிடு எம்.சி., பி. கே. பழனியப்பன், எஸ். வி. விசுவநாதன் எம்.சி., ஜி. எஸ். இராமசாமி எம்.சி., பி. வி. சரவணமுத்து, ஏ. கே. வீரப்பன்.

ஆற்காடு

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு பெரியார் திடலில்; தலைவர்: பி. என். இராமசாமி; பேசுவோர்: எஸ்.எஸ். மாரிசாமி, ஜி. விசுவநாதன் எம்.ஏ.பி.எல்., எம்.பி., நா. வீராசாமி எம்.எல்.ஏ., அ. லோகநாதன், ஏ. கே. வில்வம், பெ. தா. ஈசுவரன் எம்.சி., பூ. துரைசாமி பி.ஏ.பி.எல். (காலை 11 மணிக்கு வேலூர் சாலை திருப்பத்தில் பி. எஸ். பத்மநாபன், ஏ. செல்வராசு தலைமையில் உணவு வழங்கப்படும்.)

மதுரை

பகுத்தறிவுப் பாசறைச் சார்பில் இரவு 7 மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்: எம். தங்கவேல்; பேசுவோர்: கூடலரசன், கு. திருப்பதி பி.ஏ.பி.எல்., சொ. கோவிந்தராசன் எம். எல். ஏ., சொ. காவேரிமணியம் பி.எஸ்சி., பி.எல்., எஸ். டி. நடராசன்.

28--9--67

சென்னை 44-வது வட்டம்

திருவள்ளுவர் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு; தலைவர்: மு. சேவியர்; பேசுவோர்: கா. வேழவேந்தன் பி.ஏ.பி.எல்., எம். எல்.ஏ., வேலூர் நாராயணன் எம்.ஏ.பி.எல்., துரை. முருகன் பி.ஏ., ஜீவா. கலைமணி பி.ஏ.

தாடிக்கொம்பு

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: எஸ். வி. சுந்தரம்; பேசுவோர்: ஆ. திராவிடமணி, தமிழ்மாறன்.

சீர்காழி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு வைரவன் கோடியில்; தலைவர்: க. முத்தலீப்; பேசுவோர்: கா. சுப்ரவேலு எம்.பி., மற்றும் பலர். (திருவாரூர் முருகுபாண்டியன் பலகுரல் கலை நிகழ்ச்சி உண்டு.)

திண்டுக்கல்

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு பேகம்பூர் இராமா கபே எதிரில்; தலைவர்: ஏ. சிக்கந்தர் பாட்சா; பேசுவோர்: க. அன்பழகன் எம்.ஏ.,எம்.பி., நீ. அன்புச்செழியன் பி.ஏ.,எம்.பி., அ. பாலமுருகேசன் பி.எஸ்.சி., பி.எல்., எம். பிச்சை.

கீழக்கரை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு முஸ்லீம் கடைத் தெருவில்; தலைவர்: எஸ். இராமசாமி; பேசுவோர்: கா. காளிமுத்து பி.ஏ., எஸ். பெருமாள், பி. எஸ். விசயசாமி, இரா. நாகராசன்.

எருமணந்தாங்கல்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: இரா. இரங்கநாதன்; பேசுவோர்: ப. உ. சண்முகம், எம். சண்முகம் எம் எல்.ஏ., வெ. கிருட்டினமூர்த்தி எம்.ஏ.பி.எல், எம்.பி., எம். இராமன் எம்.எல்.ஏ., வி. அனந்தசயனம், கே. செயராமன், பி. சம்பந்தம், வி. இராமசாமி.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13, [illegible] வெளியிடப்பெற்றது.